**கவனிக்க.-** *10.02.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1746 - 2012 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2012.02.17

*1746 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 40 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 41 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாண சபையின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய சித்தரா மானெல் கோட்டவத்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.07.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள ரத்/ப்ரா/33737 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கனேகல்ல, இரத்தினபுரி எனும் முகவரியில் வசிக்கும் ஜுவானிசிலாகே சிரிசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு, இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஜயபூமி இடம் சங். 01/ 3341 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.10.04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளரா வதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2012.03.19 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவின் குருவிட்டி கோரளை தெற்கு உட பற்றில்/கிலிமலே வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கொரவதுஹேன முகலான எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை அத்தியட்சகர், இரத்தினபுரி என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு எப்ிவிபி 335 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 03 ஆம் இலக்கக்காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 01 ஏக்கர் 00 றூட் 00 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு - வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 04, கொஸ்கஸ் மண்டிய, நீரோடைக்கான ஒதுக்கு ; கிழக்கில்: காணித்துண்டு இலக்கம் 02, கொஸ்கஸ் மண்டிய, நீரோடைக்கான ஒதுக்கு ; தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 02, காணித்துண்டு இலக்கம் 129 இன் ஒரு பகுதி ; மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 05, காணித்துண்டு இலக்கம் 129 இன் ஒரு பகுதி.

சீ. எம். கோட்டவத்த,
பிரதேச செயலாளர்,
இரத்தினபுரி .

2010.12.21.

2-367

*இணைப்பு 9*

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சபரகமுவ மாகாண சபையின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள எலபாத்த பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய ரஞ்சனி ஹேமலதா சமரசிங்க திசாநாயக ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.06.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள ரத்/ப்ரா/34101 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அளுகெட்டிய எனும் முகவரியில் வசிக்கும் கொளொம்புகம ஆச்சாரிகே ஞானசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு, இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஜயபூமி இ. சங். 14/1382 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.10.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2012.03.19 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் எலபாத்த பிரதேச செயலாளர் பிரிவின் நவதுன்கோரளே பள்ளேபத்து கொட்டாமுல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அளுகெட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை அத்தியட்சகர் இரத்தினபுரி பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு எப்ிவிபி 81 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 145 ஆம் இலக்கக்காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 00 ஏக்கர் 02 றூட் 16 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதும் எலபாத்த பிரதேச செயலாளரின் 1999.03.24 ஆந் திகதியிடப்பட்ட, ஏப்ரலே/ 50/ 2/ 774 அனுமதியின் பிரகாரம், அனுமதிபெற்ற நில அளவையாளர் கே. ஈ. சுமதிரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 110 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய காணித்துண்டு 02 எனக் காட்டப்பட்டுள்ளதும், 00ஏக்கர் 00றூட் 35.6 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணித்துண்டு - வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 75 மற்றும் இந்தக் காணியின் ஒரு பகுதியான காணித்துண்டு இலக்கம் 01 ; கிழக்கில் : இந்தக் காணியின் ஒரு பகுதியான காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் காணித்துண்டு இலக்கம் 85 ; தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 85 மற்றும் இந்தக் காணியின் ஒரு பகுதியான காணித்துண்டு இலக்கம் 03 ; மேற்கில் : இந்தக் காணியின் ஒரு பகுதியான காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் காணித்துண்டுகள் இலக்கங்கள் 146, 75.

ஆர். எச். எஸ். திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
எலபாத்த.

2010.12.22.

2-368

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/23030.
மாகாண காணி ஆணையாளரின்
இல. : சிபிசி/எல்சி/8/1/27/97.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்டலம ஈ 449 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கண்டலம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப் வி பி 420 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் 2 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 5.230 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை பயிர்ச்செய்கை நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் தொன் வை. ஜே. ஹோட்டல்ஸ் (தனியார்) கம்பனி விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : தம்புள்ள கும்புக்கந்தன்வல பாதைக்கான ஒதுக்கம் ;
கிழக்கு : தம்புள்ள கும்புக்கந்தன்வல பாதைக்கான ஒதுக்கு எப்.வி.பி. 420 காணித்துண்டு இலக்கம் 133;
தெற்கு : எப்.வி.பி. 420 காணித்துண்டு இலக்கம் 133, சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் எப்.வி.பி. 420 காணித்துண்டு இலக்கம் 132 ;
மேற்கு : எப்.வி.பி. 420 காணித்துண்டு இல. 132, காணித் துண்டு இலக்கம் 44, தம்புள்ள கும்புக்கந்தன்வல பாதைக்கான ஒதுக்கம்.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2011.08.23 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2011 ஆம் வருடத்திற்கான வர்த்தகப் பெறுமதியின் நான்கு வீதம் வருடாந்தக் குத்தயாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ;

தவணைப்பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர்ச்செய்கை நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

பி. டி. ஐ. எல். விஜேகுணவர்தன,
காணி ஆணையாளர், (காணி)
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
2012.

2-471

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/25972.
மாகாண காணி ஆணையாளரின்
இல. : சிபிசி/எல்சி/எல்டி/4/1/29/129.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், நாஉல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஹபரகங்கமட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அரங்கலயாய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப் வி பி 251 பிற்சேர்க்கை 15 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 530 இன் ஒரு பகுதி எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0506 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திருமதி ஜயலத்கே லாலனி ரம்யலதா உடவல்பொல என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 514 ;
கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 529 பாதை ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 508 1/2.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் ;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்ட காலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
பிரதிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
2012.01.27.

2-632

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.